**Judicial Form No.**53
(See Rule 42)
**DEPOSITION OF WITNESSES**
(**Chapter XXII**, **Cr.P.C.**)
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SULUR.**

| | | |
|---|---|---|
| Calendars<br>Miscellaneous<br>Preliminary Register<br>Sessions | } | Case No. CC 409 of 2025 |

Depositions of PW -2 witness for ________ { Prosecution / Defence / Court

Name : திருமதி.செல்வி

Father's Name : க/பெ. ராமராஜ்

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 11th **day of March** 2026.

**(எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். போலீசார் சாட்சிகளை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தினார்கள்)**

**அரசு தரப்பில் முதல்விசாரணை**

1.நான் கிணத்துக்கடவு அருகே உள்ள பகவதிபாளையம் கிராமத்தில் குடியிருந்து கொண்டு வருகிறேன். சம்பவத்தில் இறந்த மணிவேல் எனது மகன் ஆவார். கடந்த 09.08.2019 ம் தேதி என் மகன் மணிவேல் பக்கத்து வீட்டில் வசிக்கும் கோகுல் என்பவரின் பிறந்தநாளுக்காக கேக் வாங்க வேண்டி அவரது நண்பர் முருகேசன் என்பவரை பின்னால் உட்காரவைத்துக்கொண்டு பொள்ளாச்சி-பல்லடம் மெயின்ரோட்டில் பச்சார்பாளையம் கே. ஆர்.கே திருமணமண்டபம் அருகே சென்று கொண்டிருந்தபோது எதிர் திசையில் வந்த வாகனம் மோதி விபத்து ஏற்பட்டுவிட்டதாகவும் விபத்தில் இருவருக்கும் காயம் ஏற்பட்டுவிட்டதாகவும் அருகில் இருந்த உறவினர் ஒருவர் காயம்பட்ட இருவரையும் பல்லடம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவைத்து விட்டதாக எனது கணவருக்கு போன் மூலம் தகவல் சொன்னார். அதனால் நான் மருத்துவமனைக்கு சென்று பார்த்தேன். என்

மகனை பரிசோதித்த மருத்துவர் வரும் வழியிலேயே இறந்துவிட்டதாக தகவல் தெரிவித்தார். போலிசார் எனது மகனின் பிரேத்தின் மீது பிரேதவிசாரணை மேற்கொண்டபோது உடன் இருந்தேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. வழக்கு சம்பவத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான்.

**மறுவிசாரணை** இல்லை

ARUNKUMAR T

Digitally signed by ARUNKUMAR T
Date: 2026.03.11 20:07:33 +0530

**Signature of Witness**

**நீதித்துறை நடுவர்**

**சூலூர்**